தினமணி 22.6.18

# பள்ளி, கல்லூரிகளில்...





வண்ணார்பேட்டை விவேகானந்தா வித்யாஷ்ரம் பள்ளியில் நடைபெற்ற யோகா பயிற்சியில் பங்கேற்ற மாணவர்கள். (வலது) ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யோகா பயிற்சியில் பங்கேற்ற மாணவிகள்.





பாளையங்கோட்டையில் புஷ்பலதா மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற யோகாசனத்தில் பங்கேற்ற மாணவர்கள். (வலது) லிட்டில் பிளவர் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்கள்.

**திருநெல்வேலி, ஜூன் 21:** சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு திருநெல்வேலியில் பள்ளி, கல்லூரிகளில் வியாழக்கிழமை யோகா பயிற்சி நடைபெற்றன.

வண்ணார்பேட்டை விவேகானந்தா வித்யாஷ்ரம் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைவர் சிவ. சேதுராமன், தாளாளர் திருமாறன், துணை முதல்வர் ராஜலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்து தொடங்கி வைத்தனர். யோகா ஆசிரியர் உமாநாத், மாணவர், மாணவிகள் கலந்து கொண்டனர்.

பாளையங்கோட்டை அரியகுளம் ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு பள்ளியின் நிறுவனர் ஸ்ரீமத் சுவாமி பக்தானந்த மகராஜ் தலைமை வகித்தார். செயலர் யதீஸ்வரி சரவணபவப் பிரியா அருளுரை வழங்கினார். முதல்வர் எம். மலர்விழி வரவேற்றார். பேராசிரி[illegible] முருகலிங்கம், யோகா குறித்துப் பேசினார். சிறப்பு விருந்தினராக ராஷ்டிரிய சேவா சமிதியின் செயலர் ராமசங்கரி பங்கேற்றுப் பேசினார். கல்லூரி இளங்கலை, முதுகலை மாணவர்கள் பல்வேறு நிலைகளில் யோகா பயிற்சி செய்தனர். மாணவிகளுக்கு யோகா குறித்து வினாடி வினா நடைபெற்றன.

திருநெல்வேலி நகரம் லிட்டில் பிளவர் மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு தாளாளர் அ. மரியசூசை பங்கேற்று யோகா குறித்து பேசினார். மாணவர், மாணவிகள் பல்வேறு நிலைகளில் யோகாசனம் செய்தனர். ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

பாளையங்கோட்டை புஷ்பலதா கல்வி குழுமத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு தாளாளர் புஷ்பலதா பூரணன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக சுவாமி திருமழபாடி ஆதினம் இளைய பட்டம் ஸ்ரீமத் சுவாமி யக்தேவரானந்த்புரி மகராஜ் கலந்து கொண்டு யோகாவின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

இதில், 700 க்கும் மேற்பட்ட மாணவர், மாணவிகள் கலந்து கொண்டு சூரிய நமஸ்காரம், பத்மாசனம், கோபுராசனம், வஜ்ராசனம் போன்ற ஆசனங்கள் செய்தனர். இதில் கல்விக் குழும முதல்வர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் சந்திரசேகர் தலைமை வகித்தார். துணை முதல்வர் நீதிமாணிக்கம் வரவேற்றார். யோகா குறித்து ஆசிரியர் இராமசுப்பிரமணியன் பேசினார். இதில் மாணவர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். மின்னணுவியல் மற்றும் தொடர்புத்துறை தலைவி வேதபிரியா நன்றி கூறினார்.